1973 ஆகஸ்ட் 14]

செய்யவேண்டுமென்று பரிந்துரையாகத்தான் நிதித்துறை காட்டியிருக்கிறார்கள். இடைமுறிவு ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கத் தடையாகிறது. ஆகவே, விதிவிலக்கு அளித்து, அதற்குப் பிறகு நிரந்தரம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இப்போது இருக்கும் விதிமுறையைத் தளர்த்தி, பணி உறுதி செய்யவேண்டுமென்பதற்குத்தான் இப்போது பொது (சர்வீஸ்) இலாகா, நிதி இலாகா ஆகியவற்றின் ஆலோசனை கேட்கப்படுகிறது.

மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட மன நோயாளிகள்.

*131 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— முற்ப 9-3

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மன நோயினால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விவரப்பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் நகருக்கு வடிகால் திட்டம்.

*132 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், வினா எண். 82-க்கு 8–12–72 அன்று பேரவையில் அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்திற்காக ரூபாய் 50,000 குடிநீர் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி வேலைகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம். ஆய்வு வேலைக்கான செலவுத் தொகையைப் பின்வருமாறு திருப்பூர் நகரசபை செலுத்தியிருக்கிறது.

7–9–72-ல் ரூ. 10,000

31–1–73-ல் ரூ. 40,000

(இ) ஆய்வுப் பணி 12–2–72-ல் மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 73-ல் அந்தப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

@ 389-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வா. மை அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருப்பூர் நகர சபை செலக்ஷன் கிரேடு முனிசிபாலிடியாக இருந்துகொண்டிருக்கிறது. ஒரு லட்சத்திற்கு அதிகமாக மக்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கே சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதினால், கொசுத் தொல்லைகள் போன்றவை மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த வடிகால் திட்டத்தை உடனடியாக அரசு எடுத்துக்கொண்டு நிறைவேற்றிவைக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, திட்டங்களை நிறைவேற்றுகின்றபொழுது அதற்கான பரிசீலனைகள் நடைபெற்றால்தான் அவை ஒழுங்காக நடைபெறும். இது பரிசீலனையில் இருக்கிறது. நோயாளிக்கு டாக்டர் நாடியை ஆராய்வதற்கு முன்பு மருந்து கொடுக்கக் கூடாது. பரிசீலனை செய்யவேண்டும். அதற்கு ஏறத்தாழ 8, 9 மாத காலம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்தப் பரிசீலனை முடிந்ததும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்கள் தேடப்படும். நிதி ஆதாரங்கள் கிடைத்தவுடனே அந்தத் திட்டம் செயல் முறைக்கு வரும்.

Regional Public Relations Offices

* 133 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether a number of Public Relations Offices have been opened recently at various centres in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) புதிதாக நான்கு மண்டல மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அண்மையில் இம்மாநிலத்தில் துவக்கப் பட்டுள்ளன.

(இ) (1) கன்னியாகுமரி,
(2) இராமநாதபுரம்,
(3) செங்கல்பட்டு, மற்றும்
(4) தர்மபுரி மாவட்டங்கள்

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த பப்ளிஸிடி டிபார்ட்மெண்ட் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஸ்கீம்களையும் பப்ளிஸிடி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தமிழ்நாடு சம்பந்தப்பட்ட அளவுக்குத்தான் செய்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Backward Classes whether the Public Relations Officer is also the Information and Publicity Officer and also what is the nature of work expected of him?